SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இந்த கார்ப்பார ஷனிலே அதிக டிமாண்ட் வருவதால் இன்னும் முதலீடு அதிகம் வேண்டுமென்று அவர்கள் கோரியுள்ளார்களா ? அப்படியானால் அதிக முதலீடு போட சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது கார்ப்பொ ரேஷனின் நிதி வசதி நன்றாக இருக்கிறது. டெபாஸிட்டெல்லாம் அதி மாக வந்திருக்கிறது. இப்போது அது ஒன்றும் பெரிய பிரச்னையாக இல்லை.

SRI A. A. RASHEED : May I know the total amount given as loan by the Investment Corporation to the various Industries and the loan given to the Tanning Industry?

THE HON. SRI R. VENKATARAMAN : The total amount given up to date is Rs. 3,35,40,000. So far as the industry-wise break-up is concerned, I want a separate question.

2nd March 1959]

SRI C. R. RAMASWAMI : Is it a fact that the rate of interest charged by the Corporation is as high as 7 per cent which makes applicants withdraw their applications for loans?

THE HON. SRI R. VENKATARAMAN : I have no figures as to the rates of interest charged by the Corporation but from the number of applications which are pending with the Corporation, I do not think my hon. friend is right.

SRI M. JAGANNATHAN : The Hon. Minister stated that the Investment Corporation is making profits. May I know to what extent they have made profits?

THE HON. SRI R. VENKATARAMAN : I will just give the figures. I have a recollection that it is round about Rs. 7 lakhs. (The Hon. Minister was looking through the papers.)

MR. SPEAKER : We will come to that question again at the end. We will now take up the next question.

State's investment in certain Kerala industries

* 506 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether this State have invested in the (i) Indian Rare Earths (Private), Limited, Kerala; and (ii) Ilmenite Factory, Chawara, Kerala; and

(*b*) if so, the amount invested and the rate of profit this Government got from these concerns?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

District Statistical Office

* 507 *Q.*—MR. SPEAKER : அடுத்த கேள்வி, 507. கனம் அங்கத்தினர் ஸ்ரீசங்கரன் சபையில்இல்லாததால் இந்தக் கேள்வியும் அதற்கான பதிலும் சபையின் விவாத வெளியீட்டில் அச்சிடப்படும்.

SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government propose to establish District Statistical Office at the districts of Madurai, Ramanathapuram and Nilgiris; and

(*b*) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The question of setting up District Statistical Offices in the districts in question under the Integrated Scheme for Development of Statistics, is under consideration.

Auditing of Co-operative Societies

* 508 *Q* — SRI S. M. ANNAMALAI கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957-ம் ஆண்டில் எத்தனை கூட்டுறவு சங்கங்கள் கணக்கு தணிக்கை செய்யப்பட்டன ?

(ஆ) எத்தனை சங்கங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்படவில்லை?

(இ) இப்போதாகிலும் தணிக்கை செய்யப்பட்டுவிட்டனவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Eight thousand nine hundred and twenty-four (8,924) co-operative societies were audited in 1957.

(*b*) The audit of three thousand six hundred and sixty-two (3,662) societies was pending at the end of the year.

(*c*) Out of the three thousand six hundred and sixty-two societies, the audit of three thousand five hundred and ninety-one (3,591) societies was completed subsequently and the audit of the remaining seventy-one societies was pending on 30th November 1958.

SRI S. M. ANNAMALAI : தலைவர் அவர்களே, சர்க்கார் தந்துள்ள பதிலில் 1957-ம் ஆண்டிலிருந்து இன்னும் தணிக்கை செய்யப்படாமல் சில சங்கங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு காரணம் என்ன ? அதே இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களே வைத்துத் தணிக்கை செய்வதால் இந்தக் குறைபாடு இருக்கிறதா ? இதற்கு வேறு இலாகா ஏற்படுத்தி அதன் மூலமாகத் தணிக்கை செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கணம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல. 1956-57-ம் வருஷத்தியக் கணக்கு 1-7-1957-ல் தான் முடிவடைகிறது. எல்லா சொஸைட்டிகளையும் ஆடிட் செய்து இன்னும் அதில் 71 தான் பாக்கியிருக்கிறது. இதை இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஆடிட் அட்மினிஸ்ட்ரேஷனுக்குத் தனியாக சீப் ஆடிட் ஆபீஸர் போட்டிருக்கிறோம். அது இப்போது தனியாகத்தான் இயங்கி வருகிறது.

SRI M. K. MARIAPPAN : ஆடிட் தனியாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், போதிய அளவு அங்கு சிப்பந்தி இல்லாததால், ஆடிட் சரியாக முடியவில்லை என்பதை கனம் மந்திரி அவர்கள் அறிவாரா? அதற்கு அதிகமான சிப்பந்திகளைக் கொடுப்பது கூடிய சீக்கிரம் ஆடிட் முடிவதற்கு தக்க ஏற்பாடாக இருக்கும் அல்லவா? 11-40 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : 'ஆடிட் முடியவில்லை என்று சொல்வதே தப்பு" என்று நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். 72 சொஸைட்டிகளில் தான் ஆடிட் முடியவில்லை. அப்படியிருக்க, பெரிய எண்ணிக்கையுள்ள சொஸைட்டிகளில் ஆடிட் முடியவில்லை என்று சொல்வது சரியல்ல.

SRI K. SATTANATHA KARAYALAR : 71 சொஸைட்டிகளில் கன்யாகுமரி ஜில்லாவிலும் செங்கோட்டை தாலூக்காவிலும் உள்ள சொஸைட்டிகள் தான் அதிகமாக இருக்குமா ? அப்படியானால், அதன் எண்ணிக்கையைச் சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : 47 சொஸைட்டிகள் கன்யாகுமரி ஜில்லாவில் ஆடிட் ஆகவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், அங்கு "இன்டெக்ரேஷன்" செய்வதற்கு முன்னால் அவர்கள் சரியான கணக்குப் புத்தகங்கள் எல்லாம் வைத்துக்கொள்ளாமலிருந்ததால், இப்பொழுது சரிவர கணக்குப் பார்த்து ஆடிட் செய்வதற்கு நேரமாகிறது.

SRI V. K. KOTHANDARAMAN : 71 சொஸைட்டிகள் ஆடிட் செய்யப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? உடனுக்குடனே ஆடிட் செய்யாத காரணத்தினாலே ஊழல் மேலும் அதிகப்படுகிறது என்பதை சர்க்கார் உணருகிறதா ? ஆகவே, அதைப் போக்குவதற்கும், அப்படி ஏற்படாமலிருப்பதற்கும் வேண்டி சர்க்கார் மேலும் என்ன செய்யப்போகிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN : சுமார் ஒன்பதாயிரம் சொஸைட்டிகளிலே 71 சொஸைட்டிகள்தான் ஆடிட் செய்யப்படவில்லை என்று சொன்னேன். அவைகளில் 47 சொஸைட்டிகள் கன்யாகுமரி ஜில்லாவிலும் மற்ற ஜில்லாக்களில் ஒன்றிரண்டு சொஸைட்டிகளும் இருக்கும்.

2nd March 1959]

SRI K. ANBAZHAGAN : பரிசோதனைக்கு உட்பட்ட கூட்டுறவு சங்கங்கள் எத்தனை? குறைபாடு உடையன என்று அறிந்த பிற்பாடு அவைகளில் எத்தனை மூடப்பட்டன?

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்கு தனியாக கேள்வி போடவேண்டும்.

Assistant Inspectors of Labour

* 509 *Q.*—SRI V. K. KRISHNAMURTHI (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Industries be pleased state—

(*a*) the number of Assistant Inspectors of Labour (directly recruited through Madras Public Service Commission in 1949 by competitive examination) who have been promoted so far; and

(*b*) their percentage in the actual number promoted from Assistant Inspectors to higher posts?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Nil.

(*b*) Does not arise.

SRI K. B. S. MANI : அஸிஸ்டெண்ட் லேபர் இன்ஸ்பெக்டர் பதவிக்கு "ரெக்ரூட் செய்யும்போது, சர்வீஸ் உள்ளவர்களுடைய உத்தியோக காலத்தையொட்டி, அவர்களுக்கு "ப்ரொமோஷன்" கொடுப்பதற்காவது ஏதாவது ஏற்பாடு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் "ப்ரொமோஷன்" "மெரிட்"டைப் பொருத்தது. "ஸர்வீசும்" கவனிக்கப்படும்.

* 505 *Q.*—MR. SPEAKER : Now we shall come back to Question No. 505. The Hon. Minister for Industries will now give the exact information asked for by the hon. Member, Sri M. Jagannathan.

THE HON. SRI R. VENKATARAMAN : The profit is Rs. 7,10,811. After providing, among other things, for the dividend due to the Government which is Rs. 3,40,000 and paying the guaranteed minimum dividend to the shareholders, which is about Rs. 77,000, the balance carried forward is Rs. 3,353.

SRI K. ANBAZHAGAN : சென்னை தொழில் நீலேய மூலதனக் கார்ப்பரேஷனில் சென்னை மாநில அரசாங்கம் முதலீடு செய்யக்கூடிய மொத்த தொகையை அதிகப்படுவதற்கு ஏதேனும் திட்டம் உண்டா? மொத்தத் தொகையை அதிகப்படுத்துவதற்கு லேப் இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து எதேனும் கடனுதவி வேண்டுமென்று இந்த அரசாங்கத்தாலே கேட்கப்பட்டதா?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு கோடி ரூபாய் டிபெஞ்சர்கள் எழுப்புவதாகவும் யோசனை இருக்கிறது. இப்பொழுது பிக்ஸ்ட் டிபாஸிட் அதிகமாக வந்துகொண்டிருக்கிறது. ஆகவே மூலதனத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—PRESENTATION OF THE BUDGET FOR THE YEAR 1959-60.

MR. SPEAKER : இப்பொழுது கனம் நிதி அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் 1959-60-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை இந்தச் சபை முன் சமர்ப்பிப்பார்.

---

* Printed as Appendix VI page 70 on 138 infra.

THE HON. SRI C. SUBRAMANIAM:

சபைத் தலைவர் அவர்களே,

முன்னுரை

1959-60-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையையும் நடப்பு ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளையும் சபை முன் சமர்ப்பிக்கிறேன். நான் நிதி மந்திரி பொறுப்பு ஏற்ற பின் இது எட்டாவது ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம். சென்ற ஏழு ஆண்டுகளில் நம் ராஜ்யத்தின் நிதி நிலைமையில் பல தடவைகளில் நெருக்கடியான கட்டங்கள் தோன்றின. இவற்றை சமாளிப்பதற்காக, வருடாவருடம் பல புதிய வரி விதிப்புத் திட்டங்களை இச்சபை முன் கொணர்ந்து நிறை வேற்ற வேண்டி ஏற்பட்டது. பெரும்பாலும் அதன் பலனாகவே இன்று நிதி நிலைமை ஓரளவு சீர்பட்டிருக்கிறது. இவ்வாண்டு ரூ. 15 லட்சம் உபரி ஏற்படும் என்று எதிர்பார்த்ததற்குப் பதிலாக திருத்திய மதிப்பீடுகளின்படி ரூ. 265 லட்சம் உபரியாக நிற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஆரவாரம்) ஆகவே, சென்ற ஆண்டு பட்ஜெட் விவாதத்தில் குறிப்பிட்டது போலவே 1959-60-ம் வருஷத்திய வரவு செலவுத் திட்டம் புதிய வரிவிதிப்புகள் எதுவும் இல்லாது வகுக்கப்பட்டிருக்கிறது. (ஆரவாரம்)

பருவநிலை.

2. ராஜ்யம் முழுமையும் எடுத்துக்கொண்டால் பருவ மழை குறைவாகவே பெய்திருப்பதாகத்தான் கருதவேண்டும். முக்கியமாக ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் மழைக் குறைவின் காரணமாக பல பகுதிகள் பாதிக்கப் பட்டுள்ளன. மொத்தத்தில் தென்மேற்குப் பருவ மழை 14·7 சத விகிதம் குறைவாகவும் வடகிழக்குப் பருவ மழை 26·6 சத விகிதம் குறைவாகவும் பெய்துள்ளது. தென்மேற்கு பருவ காலத்தில் செங்கல்பட்டு, தென்னார்காடு, வடார்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை ஆகிய ஜில்லாக்களில் மழை 21-லிருந்து 40 சத விகிதம் வரை குறைவாக இருந்திருக்கிறது. கோவை, ராமனாதபுரம் ஜில்லாக்களில் 10-லிருந்து 20 சத விகிதம் வரை குறைவு இருந்துள்ளது. கன்னியாகுமரியில் சாதாரணமாகப் பெய்யும் அளவிற்குப் பெய்தது. சேலம், திருநெல்வேலி, நீலகிரி ஜில்லாக்களில் சாதாரண அளவிற்கு சற்று மேலேயே மழை பெய்திருக்கிறது. வடகிழக்குப் பருவமழை தென்னார்காடு, தஞ்சாவூர், ராமனாதபுரம் ஜில்லாக்களில் 31-லிருந்து 50 சத விகிதம் வரை குறைவாகப் பெய்துள்ளது. சேலம், கோவை, திருச்சிராப்பள்ளி, மதுரை, நீலகிரி ஆகிய ஜில்லாக்களில் 11-லிருந்து 30 சத விகிதம் வரை குறைவாகவும், மற்ற பகுதிகளில் போதுமான அளவும் மழை பெய்தது. பொதுவாக 1957-58 ஆண்டைவிட இவ்வாண்டு பருவநிலை மோசமெனத் தான் கொள்ளவேண்டும். பூச்சிகளாலும் சில பகுதிகள்

பாதிக்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன காரணங்களினால் இவ்வாண்டு விவசாயத்திற்கு நல்ல சாதகமான சூழ்நிலை அமையாது போய் விளைச்சலுக்கும் ஒரளவு பாதகம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் உணவு உற்பத்தி சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு சிறிதளவு உயர்ந்திருப்பதாக பூர்வாங்க விளைச்சல் மதிப்பீடுகள் காட்டுகின்றன.

விலைவாசிகள்.

3. விலைவாசிகளில் அடிக்கடி ஏற்படும் மாறுதல்கள்தான் நம் நாட்டின் பொருளாதார நிலையில் உள்ள மிகவும் கவலைக்கிடமான அம்சமாகும். மக்களின் அத்யாவசியத் தேவைப் பொருள்களான உணவு, உடை இவைகளின் விலையில் ஏற்றங் காணும்பொழுது மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள் ஒரு புறமிருக்க அதன் காரணமாக நாட்டின் பொருளாதாரமே பாதிக்கப்படுவதைக் காண்கிறோம். அதிலும் திட்ட அடிப்படையில் நாம் பொருளாதாரத்தை வளர்க்க எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளுக்கு இவ்விலைவாசி மாறுதல்கள் மிகவும் முரண்பாடாகவும் பெருந்தடையாகவும் அமைந்துள்ளன. நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் குறிக்கோள்களுக்கு இணங்க திட்டம் நிறைவேற்றப்படவேண்டுமானால் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது மிகவும் அவசியமென்பதை மேன்மேலும் பல நிகழ்ச்சிகள் வலியுறுத்தி வருகின்றன. திட்ட அடிப்படையில் வளர்ச்சியும் கட்டுப்பாடற்ற விலைவாசியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. இதை மனதிற் கொண்டுதான் உணவு தானியங்களின் விலையேற்றத்தை நாம் ஆராயவேண்டியிருக்கிறது.

4. 1957–58-ம் ஆண்டு பட்ஜெட் உரையில், விலைவாசிகளின் ஏறுமுகம், அன்னியச் செலாவணிக் குறைவு இவை இரண்டுமே நாட்டின் பொருளாதார நிலையைப் பாதிக்கும் பெரும் சிக்கல்கள் எனக் குறிப்பிட்டிருந்தேன். நேச நாடுகளின் உதவியால் அன்னியச் செலாவணி நெருக்கடி ஒரளவு சமாளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் விலைவாசிகளின் உயர்வு இன்னும் பெரும் பிரச்சினையாகவேயிருந்து வருகிறது. அதிலும் முக்கியமாக உணவுப் பொருள்களின் விலையேற்றம் கவலைக்கிடந்தரக் கூடியதாக உள்ளது. தானிய மொத்த விலைக் குறி எண், 1957 டிசம்பரில் 512-ல் இருந்தது, 1958 டிசம்பரில் 569 அளவுக்கு உயர்ந்தது. சமீப காலத்தில் விலை சிறிதளவு குறைந்திருந்தாலும் அது முற்றிலும் அறுவடைக் காலங்களில் சாதாரணமாக ஏற்படும் விலைக் குறைவே எனத் தென்படுகிறது. ஆகவே உணவுப் பொருள்களின் விலை வருடத்திற்கு வருடம் மேன்மேலும் உயர்ந்து கொண்டே போவதை நாம் காண்கிறோம். இதன் காரணமாக வாழ்க்கைச் செலவுக் குறி எண் ஏறுமுகமாகவே இருந்து வருகின்றது.

5. வாழ்க்கைச் செலவு உயரும்பொழுது தொழிலாளர்கள் பேன்றவர்களின் ஊதியத்தை உயர்த்தவேண்டியதாகிறது. ஊதியம் உயர்ந்த காரணத்தாலேயே உணவுப் பொருள்கள் போன்ற அன்ருடத் தேவைப் பொருள்களின் விலையும் உயருகின்றது. இவ்வாறு ஊதியத்திற்கும் விலைவாசிக்கும் போட்டியேற்பட்டு ஒன்றையொன்று முந்திக் கொண்டே போவதைக் காண்கிறேம். இந்நிலை நம் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கக்கூடியதாகும்.

6. இதைப் பரிசீலனை செய்த தேசிய அபிவிருத்திக்குழு, உணவு தானியங்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் தானிய மொத்த வியாபாரம் அனைத்தையும் சர்க்காரே எடுத்துக்கொண்டு நடத்துவதுதான் வழியென்ற முடிவிற்கு வந்திருக்கிறது. இம்முடிவை யொட்டி தற்போது நம் சர்க்கார் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை கவர்னர் தம் உரையில் கூறியுள்ளார். கூடிய சீக்கிரம் தேசிய அபிவிருத்திக் குழுவின் முடிவை அமுலாக்குவதற்கான விரிவான திட்டம் உருவாகுமென எதிர்பார்க்கலாம்.

விவசாய வளர்ச்சி.

7. நாட்டின் பொருளாதாரத் துறையில் இன்று காணப்படும் பல்வேறு சிக்கல்கள் சீர்படவேண்டுமானல் விவசாயத் துறையிலும் தொழில் துறையிலும் திட்ட அடிப்படையில் கணிசமான முன்னேற்றம் காண வேண்டியது அவசியம். விவசாயத் துறையில் நம் ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கும் உற்பத்திப் பெருக்கை கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டும் :—

சத்யமேவ ஜெயதே
TRUTH ALONE TRIUMPHS

சாகுபடி நிலப்பரப்பு.

ஏக்கராக்கள் (லட்சக் கணக்கில்)

	1955–56.	1956–57.	1957–58.	1958–59.
நெல் ..	54·6	57·2	56·0	57·2
புன்செய் தானியம். ..	55·2	54·5	55·8	56·0
நிலக்கடலை ..	17·93	18·20	17·94	18·86
பருத்தி ..	11·11	10·65	11·65	11·79
கரும்பு ..	1·21	1·14	1·21	1·26

உற்பத்தி.

	1955–56.	1956–57.	1957–58.	1958–59.	
நெல் ..	29·55	31·96	32·34	32·98	(லட்சம் டன்கள் அரிசி.)
புன்செய் தானியம்.	14·66	14·83	16·86	17·23	(லட்சம் டன்கள்.)
நிலக்கடலை (பொட்டு நீக்கியது).	8·27	8·69	8·60	9·07	(லட்சம் டன்கள்.)
பருத்தி ..	3·11	3·39	3·77	3·90	(லட்சம் பேல்கள்.)
கரும்பு ..	3·35	3·26	3·40	3·61	(லட்சம் டன்கள் வெல்லம்.)

* இன்னும் தொடர்ந்து உற்பத்தியைப் பெருக்குவதற்கான பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

விதைப் பண்ணைகள்.

8. உயர்தர வித்துக்களைத் தயாரிப்பதற்கான 360 விதைப் பண்ணைகளை ஏற்படுத்துவதெனவும் இத்திட்டம் 1959–60-ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் முடிவு செய்திருந்தோம். அதையொட்டி நடப்பு ஆண்டில் 180 புதிய விதைப்பண்ணைகளைத் திறப்பதெனவும் திட்டமிட்டிருந்தோம். ஆனால் இப்பண்ணைகளுக்கான நிலத்தைப் பெறுவதிலும் பண்ணைகளை நடத்துவதிலும் சில சிக்கல்கள் ஏற்பட்டன. ஆகவே எதிர்பார்த்த அளவு பண்ணைகள் ஏற்படுத்தவும் முடியவில்லை; பல பண்ணைகளில் நாம் எதிர்பார்த்த அளவு பலனும் கிட்டவில்லை. இவ்வாண்டில் இதுவரையில் 8 புதிய பண்ணைகளை அமைக்கப்பட்டிருக்கின்றன. பல பண்ணைகளை நல்ல பலன் கிட்டாத காரணத்தாலும் சிலவற்றை நிலவளம் சரிவர இல்லாத காரணத்தாலும் இன்னும் சிலவற்றை போதுமான நீர்ப்பாசன வசதிக் குறையாலும் கைவிட வேண்டியதாயிற்று. இதே காரணங்களால் இவ்வாண்டு இறுதியில் இன்னும் சில பண்ணைகள் மூடப்படலாம். ஆகவே இவ்வாண்டு இறுதியில் சுமார் 130 பண்ணைகள்தான் நடைபெற்று வரும். இப்பண்ணைகளை மேன்மேலும் பெருக்கிக் கொண்டு போவதற்குப் பதிலாக ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பண்ணைகளைத் திறம்பட நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. அத்துடன் நிலச் சீர்திருத்தச் சட்டம் வரும்பொழுது

* 1958–59-ம் வருஷத்திற்குரிய புள்ளி விவரங்கள் பூர்வாங்க மதிப்பீடுகளின்படி நிர்ணயிக்கப்பட்டது.

உச்ச வரம்புக்கு மேற்பட்டு எடுத்துக் கொள்ளப்படும் நிலங்களை இப்பண்ணைகளுக்குப் பயன்படுத்துவது நலமாகவிருக்குமெனவும் சர்க்கார் கருதுகிறது.

உர வசதி. 9. இவ்வாண்டில் 1·37 லட்சம் டன் அமோனியம் சல்பேட் உரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு 2·15 லட்சம் டன் உரம் வழங்கப்படும். இரசாயன உரத்தை மட்டும் நாம் இன்று நம்பியிருக்க முடியாது. அத்துடன் இரசாயன உரத்துடன் இயற்கை உரமும் சேர்த்து உபயோகிப்பது சிலாக்கியம் எனக் கருதப்படுகிறது. ஆகவே இயற்கை உர வளத்தைப் பெருக்க பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நகரப் பகுதிகளில் கழிவு உரத் திட்டம் மேலும் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. எல்லா முனிசிபல் நகரங்களிலும் 280 பெரிய பஞ்சாயத்துக்களிலும் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதன்படி லாரிகள் வாங்குவதற்கும் டிராக்டர்கள் வாங்குவதற்கும் உதவி தரப்படுகிறது. இந்த உரம் டன் ஒன்றுக்கு ரூபாய் 2-க்கு அதிகப்படாத வகையில் குடியானவர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1956-57-ல் 2·6 லட்சம் டன் உரமும், 1957-58-ல் 2·59 லட்சம் டன் உரமும் வழங்கப்பட்டிருக்கிறது. 1958-59-ல் 3·6 லட்சம் டன் உரமும், 1959-60-ல் 3·74 லட்சம் டன் உரமும் வழங்கத் திட்டமிட்டிருக்கிறோம்.

10. கிராமப்புறங்களில் உள்ள குப்பை செத்தைகளைக் கொண்டு உரம் தயார் செய்யவும் தீவிர நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. 1957-58-ல் கிராமப் பகுதிகளில் 1·27 லட்சம் டன் உரம் தயார் செய்யப்பட்டதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இவ்வாண்டிலும் வரும் ஆண்டிலும் இன்னும் அதிகமாகவே உற்பத்தி செய்யப்படும் என எதிர்ப்பார்க்கலாம். இதற்கு மேலாக அபிவிருத்தி வட்டாரங்களில் இம்முயற்சியை இன்னும் விரிவுபடுத்த திட்டம் வகுக்கப்பட்டு அதன்படி 1959-60-ல் 10·48 லட்சம் டன் கிராம கம்போஸ்ட் தயார் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. அத்துடன் சிறு கிராமங்களிலும் மலக்கழிவுகளைக்கொண்டு உரம் தயாரிக்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. 1959-60-ல் 2·4 லட்சம் டன் மல உரம் தயாராகுமென எதிர்பார்க்கப்படுகிறது. பசுந்தழை உரத்தைப் பெருக்கவும் முன்போலவே முயற்சிகள் நடைபெறுகின்றன. 33·4 லட்சம் ஏக்கராக்கள் பயனடையும் வகையில் 1,342 டன் அளவு பசுந்தழைக்கான வித்துக்களை வழங்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

11. உணவு தானியங்களின் உற்பத்தியைப் பெருக்குவதோடுமட்டும் நின்றுவிடாது மற்ற விவசாயப் பொருள்களாகிய பருத்தி, எண்ணெய் வித்துக்கள், கரும்பு, தேங்காய் முதலியவைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

12. இம்முயற்சிகளின் காரணமாக ஓரளவு நமக்குப் பலன் ஏற்பட்டிருக்கிறது என்பதை புள்ளி விவரங்கள் நிரூபிக்கின்றன. உதாரணமாக, வருடா வருடம் நெல் சராசரி விளைச்சல் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது என்பதை கீழ்க்கண்ட் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டும் :—

வருஷம்.	ஏக்கரா ஒன்றுக்கு சராசரி விளைச்சல் (அரிசி). பவுண்டுகள்.
1955-56	1,214
1956-57	1,255
1957-58	1,300

இந்த வருஷத்திற்கு கணக்கு இன்னும் பூர்த்தியாகவில்லை.

நீர்ப்பாசன வசதிகள்.

13. நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதில் நாம் திட்டமிட்டபடி பல பெரிய அணைக்கட்டுகளைக் கட்டி முடித்திருக்கிறோம். மணிமுத்தாறு, ஆரணியாறு, மேட்டூர் கால்வாய்கள், அமராவதி, சாத்தனூர், வைகை, கிருஷ்ணகிரி ஆகிய திட்டங்கள் முடிவடைந்து அவைகளின் மூலம் 1958-59-ம் ஆண்டு முடிவிற்குள்ளாக 2,20,000 ஏக்கரா நிலங்கள் புதிய பாசன வசதியைப் பெறவிருக்கின்றன. அடுத்த ஆண்டு இன்னும் 25,000 ஏக்கராவுக்கு பாசன வசதி ஏற்படும். கட்டளைக் கால்வாய்த் திட்டத்திற்காக 1959-60-ம் ஆண்டில் 77 லட்சம் ரூபாயும், புள்ளம்பாடி திட்டத்திற்கு 58 லட்சம் ரூபாயும், பரம்பிக்குளத் திட்டத்திற்கு 45 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்படுகிறது. கன்னியாகுமரி ஜில்லாவில் உள்ள நெய்யாறு திட்டத்திற்கு ரூ. 10 லட்சமும், வீடூர் அணைக் கட்டுக்கு ரூ. 15 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களும் காலதாமதமின்றி முடிக்கப் பெறும். இதற்காக வரவு செலவுத் திட்டத்தில் 210 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

12 noon.

14. நம் ராஜ்யத்தில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கும் முயற்சியில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது பரம்பிக்குளத் திட்டம். இதற்கான விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய நீர்-விசை கமிஷனுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கோயமுத்தூர் ஜில்லா தென்பகுதியைச் சேர்ந்த மேற்குத் தொடர்ச்சி மலையில் மேற்கு நோக்கி ஓடும் சோலையாறு, பரம்பிக்குளமாறு முதலிய நதிகளை அணையிட்டுத் தடுத்து மலைகளைக் குடைந்து தண்ணீரைக் கிழக்கே திருப்பி கோவை ஜில்லாவில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், பல்லடம் முதலிய தாலூக்காக்களிலுள்ள சுமார் 2½ லட்சம் ஏக்கரா நிலங்களுக்கு தண்ணீர் வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் தண்ணீரை எல்லாப் பகுதிகளுக்கும் நியாயமான முறையில் பங்கிட்டுக் கொடுக்கவேண்டுமென்பதே சர்க்காரின் கொள்கை. இந்தச் சிக்கலான பிரச்சினையை ஆராய்ந்து எல்லாப் பகுதிகளுக்கும் நியாயம் வழங்கும் வகையில் முடிவு எடுப்பதற்காக

முதல் அமைச்சர், உள் நாட்டு அமைச்சர், மராமத்து இலாகா அமைச்சர் இவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி ஏற்படுத்த சர்க்கார் முடிவு செய்துள்ளது.

15. இத்திட்டத்தின் மூலம் நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் 1·25 லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும் வசதி ஏற்படும். இத்தண்ணீரை பகிர்ந்து கொள்வதைப்பற்றி கேரள சர்க்காருடன் சுமுகமான ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதன் காரணமாகவே இத்திட்டத்தை உடனடியாக எடுத்துக்கொள்ள முடிந்திருக்கிறது. இதே முறையில் மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களை அடுத்தும் சில திட்டங்களை கேரள சர்க்காருடைய ஒத்துழைப்புடன் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கான பூர்வாங்க ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன.

சிறிய நீர்ப்பாசனங்கள்.

16. வரும் ஆண்டிலும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முக்கிய இடங்கொடுத்து அதற்கென 84 லட்சம் ரூபாய் அளவில் 1,200 வேலைகளை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அவைகளில் 595 வேலைகள் இந்த ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டவையாகவும் பாக்கியுள்ள 605 புதிய திட்டங்களாகவும் இருக்கும். வடிகால் கிணறுகள் 600 ஏற்படுத்துவதற்காக குடியானவர்களுக்குக் கிணறு ஒன்றுக்கு 2,500 ரூபாய் வீதம் கடன் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. புதிய கிணறுகள் வெட்டுவதற்காக 20 லட்ச ரூபாயளவில் மான்யம் கொடுக்கும் திட்டமொன்றும் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த எல்லாத் திட்டங்களுக்குமாகச் சேர்த்து 118 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படும்.

17. சிறிய நீர்ப்பாசனத்தின் மூலம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த மூன்று வருஷங்களின் சாதனைகளைக் காட்டக்கூடிய புள்ளி விவரங்களைக் கீழே தருகிறேன் :—

	1956–57.	1957–58.	1958–59.	மொத்தம்.
புதிதாக ஏற்பட்ட நீர்ப்பாசன வசதிகள் (ஆயிரம் ஏக்கராவில்) ..	45·61	43·00	88·09	176·70
செலவு (லட்சக் கணக்கில்) ..	69·37	68·48	98·07	235·92

இத்துறையில் விரிவான திட்டங்களை ஏற்று நடத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அவைகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வது நமது கடமை.

18. மின்சாரத்தைப் பயன்படுத்தி தண்ணீர் இறைப்பதன் மூலம் பாசன வசதிகளைப் பெருக்குவதற்கும் பெரிய அளவில் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் 14,626 பம்புகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. அத்திட்ட இறுதியில் 32,440 பம்புகளுக்கு மின்சார வசதி கிடைத்திருந்தது. 1956-57 முடிவில் அந்த எண்ணிக்கை 45,173 ஆக உயர்ந்தது. 1957-58-ல் 62,726 ஆகவும், 1958 டிசம்பர் முடிவில் 75,193 ஆகவும் உயர்ந்திருக்கிறது. இதை ஒரு அரிய சாதனையாகவே கருதலாம்.

19. கால்நடை வளர்ப்பும் விவசாய அபிவிருத்திக்கு மிகவும் இன்றியமையாதது. ஆகவே இத்துறையிலும் மிக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பதினேந்து கேந்திர ரோம நிலையங்கள் நிறுவப்பட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 1958-59 வரை மேலும் 12 நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. 1959-60-ல் மேலும் நான்கு நிலையங்கள் ஏற்படுத்தப்படும். இந்த நிலையங்கள் மூலம் மாடுகளின் தரம் மேன்மேலும் உயர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையங்களுக்காக 8 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். கால்நடை வளர்ப்பு.

20. செயற்கை கருமுறை நிலையங்கள் இப்பொழுது ஒன்பது இயங்கி வருகின்றன. வரும் ஆண்டில் நான்கு நிலையங்கள் ஆரம்பிக்கப்படும். பன்னிரண்டு புதிய விஸ்தரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு நிலையத்தின் மூலமும் ஐம்பது உயர்தர பொலி காளைகள் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்படும். இதற்கு 12 லட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

21. செட்டி நாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் கால்நடைப் பண்ணைக்கு நான்கு லட்சம் ரூபாயும், ஒர்த்தநாடு பண்ணைக்கு ஒரு லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பண்ணைகள் நல்ல முறையில் வளர்ச்சியுற்று வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். கோழி வளர்ப்புக்கான திட்டங்கள் இவ்வாண்டில் 4 லட்ச ரூபாயளவில் எடுத்துக்கொள்ளப்படும். கால்நடைக் கல்விக் கல்லூரிக்காக 21 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

22. சென்னை நகரத்துக்கு அருகாமையில் ஏற்படுத்தப் பட்டுவரும் மாட்டுப்பண்ணையில் 2,000 மாடுகளை பராமரிப்பதற்கான வசதிகள் ஏற்பாடாகிவிட்டன. 1959-ல் இன்னும் 40 லட்சம் ரூபாய் செலவழித்து இந்த வசதிகள் பெருக்கப் படும். நியூஜிலாந்து நாட்டு சர்க்கார் இத்திட்டத்திற்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கும் உதவி இவ்வாண்டு

கிடைக்கலாமென எதிர்பார்க்கலாம். மற்றும் இதர பால் பண்ணைகளின் அபிவிருத்திகளுக்காகவும் 18 லட்ச ரூபாய் செலவிடப்படும்.

காடுகள்.

23. காட்டு வளத்தைப் பெருக்கும் வேலை திட்டமிட்டபடி நடைபெற்று வருகின்றது. கடலோர மாவட்டங்களில் முந்திரி, சவுக்கு முதலியன நல்ல முறையில் பயிரிடப்பட்டு வளர்ந்து வருகின்றன. நீலகிரியில் ப்ளுகம், வாட்டில், தீக்குச்சி மரம் வளர்ப்பதும் வாய்க்கால் கரையோரங்களில், தேக்கு மரங்களை வளர்க்கும் திட்டமும் செவ்வனே நடைபெற்று வருகின்றன. இத்திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வர 31 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முதுமலையிலுள்ள வனவிலங்குகளின் புகலிடத்தையும் வேடந்தாங்கலிலுள்ள பறவைகளின் புகலிடத்தையும் அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மலைப் பிரதேசங்களிலும் சமவெளியிலும் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக 21 லட்சம் ரூபாய் அளவில் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

மீன் துறை.

24. மீன் துறையில் 1959-60-ம் ஆண்டில் திட்டங்கள் 27 லட்சம் ரூபாய் அளவிற்கு எடுத்துக்கொள்ளப்படும். அவைகளில் முக்கியமானது 30 விசைப் படகுகள் கட்டி சரசமான விலைக்கு மீனவர்களுக்கு அவைகளை வழங்குவது. நடப்பு ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டங்களும் இன்னும் சில புதிய திட்டங்களும் நிறைவேற்றப்படும்.

சமுதாய நலத் திட்டங்கள்.

25. இதுவரை சமுதாய நலத்திட்டமும் தேசிய நலப் பரப்புத் திட்டமும் 176 வட்டாரங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது. 9,300 கிராமங்களில் 1·55 லட்சம் மக்கள் இதன் பயனை அடைந்து வருகிறார்கள். 1959-60 ஆண்டு இறுதிக்குள் இன்னும் 34 வட்டாரங்களில் இத்திட்டம் பரவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வரவு செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 3,68 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஸ்தல அபிவிருத்தித் திட்டம் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் மூலம் கொடுக்கப்படும் சலுகைகளை மக்கள் வெகு உற்சாகத்துடன் பயன்படுத்திக்கொண்டு பல உபயோகரமான வேலைகளைச் செய்து முடித்திருக்கின்றனர். இத்திட்டம் தொடர்ந்து நடைபெறுவதற்காக வரும் ஆண்டில் 35 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

26. நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் கூட்டுறவு முறை பெரிய அளவில் கையாளப்பட வேண்டுமென்று தேசிய அபிவிருத்திக் குழு சமீபத்தில் எடுத்திருக்கும் முடிவை கனம் அங்கத்தினர்கள் அறிந்திருப்பார்கள். அதிலும் முக்கியமாக

2nd March 1959] [Sri C. Subramaniam]

கூட்டுறவு முறையை அடிப்படையாகக் கொண்டு நிலச்சீர் திருத்தத் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இம்முக்கிய பணியை நிறை வேற்றக்கூடிய சக்தி பொருந்திய ஒரு இயக்கமாக கூட்டுறவுத் துறை பணிபுரிய எல்லா முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும். நம் நாட்டில் இதுவரை கூட்டுறவு ஸ்தாபனங்கள் பெரும் பாலும் கடன் வழங்கும் ஸ்தாபனங்களாகவே அமைந்திருக் கின்றன. சென்னை ராஜ்யம் கூட்டுறவு இயக்கத்தில் முன் னணியில் இருந்தாலும் இங்கும் அதே அடிப்படையில்தான் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக இந்த இயக்கத்திற்கு புதிய திருப்பம் கொடுக்க வேண்டியது அவ சியம். குடியானவர்களுக்கு எல்லாவித வசதிகளையும் செய்து கொடுக்கும் வகையில் கூட்டுறவு சங்கங்கள் பல்நோக்கு சங்கங்களாக மாற்றியமைக்கப்படுவது அவசியம். கூட்டுறவு சங்கங்கள் மூலம் உயர் ரக விதைகள், உரம், விவசாயக் கருவி கள், நீர்ப்பாசன வசதிகள் முதலியன கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கான விரிவானதொரு திட்டத்தை வகுக்க ஆலோசித்து வருகிறோம்.

இதற்கிடையில் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் குடியான வர்களுக்குப் போதிய அளவு கடன் வசதிகள் செய்துகொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டில் 13·5 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு 16 கோடி ரூபாய் அளவிற்கு இது உயர்த்தப் படும். மொத்தக் கிராமங்களில் நூற்றில் எண்பத்தைந்து பங்கு கிராமங்களும் ஜனத்தொகையில் 45 சத விகிதமும் இக்கடன் வசதியைப் பெறுவார்கள். நூறு பெரிய சங்கங் களையும் 200 சிறிய சங்கங்களையும் அடுத்த ஆண்டில் ஆரம் பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. நான்கு புதிய நில அடமான பாங்குகளும் ஆரம்பிக்கப்படும்.

27. விற்பனைச் சங்கங்களைப் பெருக்குவதற்கும் திட்ட மிடப்பட்டுள்ளது. தானிய சேமிப்புக் கிடங்கு கார்பரேஷன் வேலைசெய்யத் தொடங்கிவிட்டது. இவ்வாண்டு முடிவிற்குள் 60 கிடங்குகள் கட்டி முடிக்கப்படும். அத்துடன் ஆறு புதிய அடிப்படை விற்பனைச் சங்கங்களும் (primary marketing societies) ஒரு மத்திய (apex) விற்பனைச் சங்கமும் ஆரம்பிக்கப்படும். அடுத்த ஆண்டில் மேலும் ஆறு விற்பனைச் சங்கங்கள் நிறுவவும் 65 புதிய கிடங்குகள் கட்டவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. பதினைந்து கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் இவ்வாண்டிற்குள ஆரம்பிக்கப்படும். அடுத்த ஆண்டு மேலும் ஐந்து பண்ணைகள் அமைக்கப்படும்.

இரண்டு கூட்டுறவு பயிற்சி நிலையங்கள் புதிதாக ஆரம்பிக் கப்பட்டு அவைகளில் 320 பேர் பயிற்சி பெறுவார்கள்.

[Sri C. Subramaniam] 2nd March 1959]

தொழில்கள்

28. நம் ராஜ்யத்தில் பெருந் தொழில்கள் நிறுவ எடுத்துக் கொண்ட பல முயற்சிகள் வெற்றி பெற்று வருவதைக் காண்கிறோம். நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் திருப்திகரமான முறையில் முன்னேறி வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டுதான் பல தொழில்கள் பிற்காலத்தில் ஏற்பட இருக்கின்றன. 1957-58 முடிய இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டிருக்கும் தொகை 10·67 கோடி ரூபாய். கனம் அங்கத்தினர்களுக்கு தெரிவிக்கிறேன், அடுத்த ஆண்டு இதற்கு என்று 13 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைப்பற்றி இவ் வாண்டில் மேலும் 6·5 கோடிரூபாய் செலவாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. தற்போது சுமார் 8,000 மக்கள் இத் திட்டத்தில் வேலை செய்து வருகிறார்கள்.

பெரம்பூரில் அமைக்கப்பட்டிருக்கும் ரயில் பெட்டிகள் செய்யும் தொழிற்சாலையும் நல்ல முறையில் அபிவிருத்தியடைந்து வருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இதற்காக 5·12 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டது. 1958 இறுதிக்குள் மேலும் இரண்டு கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. தற்போது இத்தொழிற்சாலையில் 6,216 பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு சராசரி 400 பெட்டிகள் கட்டுவதற்கான அளவிற்கு தொழிற்சாலை விரிவாக்கப்பட்டு இயங்கி வருகிறது.

தனியார் துறையில் பல தொழிற்சாலைகள் கட்டி முடிக்கப் பெற்று உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. அம்பத்தூரில் கட்டப் பட்டுள்ள டன்லப் ரப்பர் டயர் கம்பெனியும் மின்பொருத்தி சாதனங்கள் (Switch-gear) செய்வதற்கான தொழிற் கூடமொன்றும் சமீபத்தில் உற்பத்தி செய்யத் தொடங்கின. டி.ஐ. சைக்கிள் கம்பெனியில் உற்பத்தியை விரிவாக்கும் திட்டம் முடிவுற்று இன்னும் பல புதிய சாமான்களைச் செய்வதற்கான திட்டமும் உருவாகிக் கொண்டிருக்கிறது. பேட்டை வாய்த்தலையில் ஏற்படுத்தியுள்ள சர்க்கரை ஆலையிலும் உற்பத்தி தொடங்கிவிட்டது.

திருநெல்வேலியில் அமைக்கப்பட்டுவரும் சோடா உப்பு தொழிற்சாலை இன்னும் சில மாதங்களில் உற்பத்தியில் ஈடுபடுமென எதிர்பார்க்கப்படுகிறது. கோவை ஜில்லாவில் செயற்கைப் பட்டுத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான பூர்வாங்க வேலைகள் முடிவுற்று தொழிற்சாலை இப்போது உருவாக ஆரம்பித்திருக்கிறது. மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் முடிவடையுந் தருணத்தில் இருக்கின்றன. நீலகிரியில் கச்சா பிலிம் தொழிற்சாலை அமைப்பதற்கு கிழக்கு ஜெர்மனி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறது.

சிறு ரகத் தொழில்கள்.

29. சிறு ரகத் தொழில்கள் ஏற்படுத்துவதில் நம் ராஜ்யம் கணிசமான முன்னேற்றமடைந்திருக்கிறது. கிண்டியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தொழிற் பண்ணை உருவாவதில் முக்கியமான கட்டம் சமீபத்தில் முடிவடைந்தது. அது சம்பந்தமாக நடைபெற்ற விழாவில் மத்திய அரசாங்க தொழில் அமைச்சர் திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். இது வரையிலும் சர்க்கார் இப்பண்ணையில் முதலீடு செய்திருக்கும் தொகை ரூ. 70 லட்சம். இது போக தனிப்பட்டவர்களும் இதில் முதலீடு செய்துள்ளார்கள். இப்பண்ணையில் 1,500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். வருடம் ஒன்றுக்கு ரூ. 148 லட்சம் அளவிற்கு பல பொருள்கள் உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு தற்போது உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்திருக்கும் பொருள்களில் பல இப்போது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுபவை. ஆகவே இதன் மூலம் அன்னியச் செலாவணி நெருக்கடியை ஓரளவு தீர்ப்பதற்கும் வழி ஏற்படுகிறது. இத்தொழிற்பண்ணை மற்றவர்களுக்கு வழிகாட்டும் ஒரு மாதிரிப் பண்ணையாக அமைந்திருக்கிறதென்று கூறலாம். கிண்டி பண்ணையில் மின்சாரக் கருவிகள் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் தொழிற்சாலையும் வாடகைக் விடவிருக்கும் இயந்திரங்களின் சாலையும் (common lease shop) இயந்திர ரிபேர் வசதிகளுக்காக பொள்ளாச்சி, பேட்டை ஆகிய இடங்களில் அமைத்திருக்கும் ஸ்தாபனங்களும் பற்பல இடங்களில் தயாரிக்கப்படும் பாகங்களைக்கொண்டு சைக்கிள் கட்டுவதற்காக வேலூர், தஞ்சாவூரில் ஏற்படுத்தப் படும் தொழிற்கூடங்களும், கண்ணாடி செய்வதற்கான மணலைத் தயாரிக்க சேலத்தில் நிறுவப்படும் தொழிற்சாலையும் 1959–60 ஆரம்பத்தில் பணியாற்ற ஆரம்பிக்கும் என எதிர் பார்க்கலாம். விருதுநகர், மதுரை, ஈரோடு, திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் கட்டப்பட்டுவரும் தொழிற்காலனிகள் கூடிய சீக்கிரத்தில் முடிவுற இருக்கின்றன. தஞ்சாவூரில் ஒரு தொழிற்பண்ணையும், சென்னை வால்டாக்ஸ் ரோட்டில் இயந்திர மெருகிடும் பொதுச்சாலை (Common finishing shop) ஒன்றும், தென்னாற்காடு ஜில்லாவில் உப்பு சேர்த்து மெருகேற்றிய மண் குழாய்கள் (Salt glazed pipes) செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றும் 1959–60-ல் கட்ட ஆரம்பிக்கப்படும். மேலே கண்டபடி சர்க்கார் எடுத்துவரும் முயற்சிகளின் காரணமாகத் தனியார் துறையிலும் பல சிறு ரகத் தொழில்கள் ஏற்பட்டுவருவதைக் காண்கிறோம்.

தொழில் வளர்ச்சி.

30. பொதுவாகப் பார்க்குமிடத்து தொழில் துறையிலும் நாம் மேன்மேலும் முன்னேறி வருகின்றோம் என்பது தெளிவாகிறது. இதற்கான சில புள்ளி விவரங்களை இச்சபை முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

மின்சார சக்தி எந்த அளவிற்கு தொழில்களுக்காக உபயோகப்படுகின்றது என்பதைக் கொண்டு தொழில் வளர்ச்சியை அளவிடலாம். அந்தப் புள்ளி விவரங்கள் பின்வருமாறு :—

தொழிற் துறையில் உபயோகமாகும் மின்சாரத்தின் அளவு

(இதில் லேசென்சிகள் வழங்கும் மின்சாரம் சேர்க்கப்படவில்லை).

1953–54	22·8 கோடி யூனிட்டுகள்.
1954–55	31·1 கோடி யூனிட்டுகள்.
1955–56	32·5 கோடி யூனிட்டுகள்.
1956–57	34·3 கோடி யூனிட்டுகள்.
1957–58	42·1 கோடி யூனிட்டுகள்

இது ஐந்து வருஷங்களில் ஏறக்குறைய இரட்டித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சில முக்கியமான தொழில்களுக்கான புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன :—

	1954.	1957.
மொத்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை—		
நூல், துணி மில்கள் ..	233	358
என்ஜினீரிங்	141	157
ஜின்னிங்	246	256
அரிசி மில்கள்	555	661
சிமெண்ட்	3	3

(ஒன்று இப்பொழுது உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.)

மொத்தம் ..	1,178	1,435
இத்தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை—		
நூல், துணி மில்கள் ..	98,271	114,458
என்ஜினீரிங்	7,222	12,526
ஜின்னிங்	11,059	12,475
அரிசி மில்கள்	8,234	11,811
சிமெண்ட்	2,495	2,548
மொத்தம் ..	127,281	153,818

	1954.	1957.
இத்தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட கூலி—	(ரூபாய் லட்சக்கணக்கில்)	
நூல், துணி மில்கள் ..	10,24	13,16
என்ஜினீரிங்	74	109
ஜின்னிங்	44	21

2nd March 1959] [Sri C. Subramaniam]

(கொஞ்சம் குறைந்திருக்கிறது. ஏனென்றால் புள்ளி விபரங்கள் சரியாகக் கிடைக்கவில்லை.)

அரிசி மில்கள்	24	31
சிமெண்ட்	28	32
மொத்தம் ..	11,94	15,09

இந்த ராஜ்யத்தில் எல்லாத் தொழில்களுக்குமாகச் சேர்த்து மொத்தம் சுமார் 5,000 தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவற்றில் முக்கியமாக 29 தொழில்களைத் தேர்ந்தெடுத்து அதற்கான புள்ளி விவரங்களைச் சேகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தொழில்களில் 800 தொழிற்சாலைகள் உள்ளன. நமது ராஜ்யத்தில் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் மொத்த தொழிலாளர்களில் 48 சதவிகிதம் இந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். இந்த 800 தொழிற்சாலைகளில் ஈடு செய்யப்பட்டிருக்கும் மூலதனத் தொகை அளவு விவரம் பின்வருமாறு :—

1955	ரூ. 59·97 கோடி.
1956	ரூ. 72·28 கோடி.
1957	ரூ. 86·97 கோடி.

வருஷம் ஒன்றுக்கு சுமார் 13 அல்லது 14 கோடி ரூபாய் உயர்ந்து வந்திருக்கிறது என்பது தெரியும். இந்தத் தொழிலில் மட்டும் இந்தப்புள்ளி விவரங்கள் நமக்கு ஓரளவு திருப்தியளிக்கக்கூடியதாக இருந்தாலும் இன்னும் விரிவான முறையில் பல தொழில்கள் ஏற்படவேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இதை மனதில் கொண்டுதான் நம் ராஜ்யத்தில் இருக்கக்கூடிய பல்வேறு தொழில் வாய்ப்புகளையும் ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பணியை டெல்லியில் இருக்கும் ஒரு ஸ்தாபனம்-தேசீய பொருளாதார ஆராய்ச்சிக் குழு (National Council of Applied Economic Research) ஏற்றுக்கொண்டுள்ளது. பல அன்னிய நாட்டு நிபுணர்களும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். ஏப்ரல் மாத இறுதியில் இந்த அறிக்கை நமக்குக் கிடைக்குமென எதிர் பார்க்கலாம். அத்துடன் நம் ராஜ்யத்தில் என்னென்ன கனிப்பொருள்கள் கிடைக்கும் என்ற ஆராய்ச்சியும் நடந்து வருகிறது. இவைகளின் மூலம் நமக்குக் கிடைக்கும் பல்வேறு புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு சிறந்த ஒரு தொழிற் திட்டத்தை வகுக்க முடியும் என்று நம்புகிறேன்.

மின்சாரம்.

31. தொழில் வளர்ச்சிக்கு அனுசரணையாக மின்சாரத் துறையில் கணிசமான முன்னேற்றம் இவ்வாண்டு ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வருடத்தில் 14 கோடி ரூபாய் வெவ்வேறு திட்டங்களுக்காக செலவிடப்படும். சென்னை மின்சார உற்பத்தி நிலையத்தின் விஸ்தரிப்பு முடிவடைந்து சென்ற ஏப்ரல் மாதத்திலிருந்து மேலும் 30,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் புது இயந்திரங்கள் இயங்க ஆரம்பித்திருக்கின்றன. பெரியாறு மின்சாரத் திட்டத்தில் சென்ற அக்டோபர் மாதத்தில் ஒரு இயந்திரமும் பிப்ரவரியில் ஒரு இயந்திரமும் இயங்க ஆரம்பித்து மொத்தம் 70,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகின்றது. கூடிய சீக்கிரத்தில் மூன்றாவது இயந்திரமும் வேலை செய்ய ஆரம்பிக்கும் என எதிர் பார்க்கலாம். குந்தாத் திட்டமும் வேகமாக முன்னேறிவருகிறது. புதியதாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் சாந்தினுல்லாத் திட்டத்திற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

1959-60-ம் ஆண்டில் மின்சாரத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 1,108 லட்சம் ரூபாய். இவ்வாண்டில் குந்தாத் திட்டத்திலும் மின்சார உற்பத்தி ஆரம்பமாகும். ஆகவே புதிய தொழில்கள் ஏற்படுவதற்கு வேண்டிய அளவு மின்சார உற்பத்தி அதிகரித்திருக்கிறது. அத்துடன் அடுத்த ஆண்டில் ஆயிரம் கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. எனவே மின்சார வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை நம் ராஜ்யத்தில் சுமார் 9,000 வரை உயரும்.

தொழிற் கல்வி.

32. தொழில் வளம் பெருகுவதற்கு ஆதரவாக தொழிற் கல்வியும் பெருகுவது அவசியம். இக்கட்டத்தில் தென் பிராந்தியத்திற்காக ஏற்படுத்தப்படும் உயர் தொழிற் கல்வி நிலையம் (Higher Technological Institute) கிண்டியில் அடுத்த ஆண்டிலிருந்து ஆரம்பமாக விருப்பது மிகவும் வரவேற்கத் தக்கது. பல்தொழில் பயிற்சிக் கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு 2,160 புதிய மாணவர்களைச் சேர்க்க வசதி பெருகியிருக்கின்றது. தொழிற் கல்லூரிகளில் ஆண்டு ஒன்றுக்கு 1,157 பேர் சேர வசதி ஏற்பட்டிருக்கிறது. பட்டப்படிப்புக்கு மேற்பட்ட படிப்பில் 57 மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி பெற இடம் பெருகிருர்கள். இவ்வாண்டு தொழிற் கல்விக்கென 74 லட்சம் ரூபாய் செலவாகும். அடுத்த ஆண்டிற்கு 93 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

12-20 p.m.

கதர்

33. பெருந் தொழில்கள் பல ஏற்பட்டாலும் அவைகளின் மூலம் வேலை வாய்ப்புகள் ஏற்படுவது மிகவும் குறைவே. ஆகவே நாட்டில் உள்ள வேலையில்லாக் குறையை நீக்கவேண்டுமென்றால் பெரும் அளவில் குடிசைத் தொழில்களை ஆரம்பிப்பது அவசியமாகிறது. இதன் காரணத்தால்தான் சர்க்கார்

2nd March 1959] [Sri C. Subramaniam]

கதர் திட்டத்திற்கு முக்கிய இடம் கொடுத்து கதர் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சி எடுத்து வருகிறது. இரண்டாவது திட்ட ஆரம்பக்காலத்தில் 66,133 பேர் சர்க்கார் கதர் திட்டத்தின்கீழ் நூல் நூற்கும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். இன்றைக்கு அந்த எண்ணிக்கை 1,64,427 ஆக உயர்ந்திருக்கிறது. சர்க்கார் திட்டத்துடன் சர்க்கா சேவா சங்கத்தினர் ஏற்று நடத்திவரும் கதர் வேலைகளையும் சேர்த்துப் பார்த்தால் நூல் நூற்பதன் மூலம் 3 லட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதை அறிகிறோம்.

சர்க்கார் கதர் திட்டத்தின் மூலம் இரண்டாவது திட்ட ஆரம்பத்தில் 35·52 லட்சம் ரூபாய் பெறுமான கதர் உற்பத்தியாயிற்று. இவ்வருடம் அது 68·44 லட்சம் ரூபாய் அளவிற்கு அதிகரித்திருக்கிறது. கதர் வேலைகளை விரிவாக்குவதன் மூலம் அடுத்த ஆண்டில் இன்னும் 26,000 பேர்களுக்கு நூல் நூற்கும் வேலை கொடுக்க ஏதுவாகும்.

அம்பர் சர்க்காத் திட்டமும் விரிவடைந்து வருகின்றது. இது வரையிலும் 30 பரிசிரமாலயங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு முடிவிற்குள் இன்னும் பத்தொன்பது பரிசிரமாலயங்கள் திறக்கப்படும். 1959-60-ல் மேலும் 20 பரிசிரமாலயங்கள் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 12,000 பேர் நூல் நூற்கும் பயிற்சி பெற்று இத்தொழிலில் ஈடுபடுவார்கள். அம்பர் சர்க்காக்கள் தயார் செய்ய பொள்ளாச்சியில் ஒரு தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 84,000 அம்பர் சர்க்காக்கள் இங்கு உற்பத்தி செய்ய முடியும். இந்தக் கதர்த் திட்டங்களுக்காக 1959-60-ம் ஆண்டில் 140 லட்சம் ரூபாய் நிதி வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையை காதி கமிஷன் கொடுத்துதவும்.

கைத்தறி.

34. சமீபகாலத்தில் ஜவுளித் தொழிலில் ஒரு நெருக்கடி ஏற்பட்டது கனம் அங்கத்தினர்களுக்கு நினைவிருக்கலாம். அந்நெருக்கடி மில் தொழிலைவிட கைத்தறித் தொழிலைத் தான் அதிகமாகப் பாதித்தது. அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக நெருக்கடி சமாளிக்கப்பட்டு நிலைமை கொஞ்சம் சீர்திருந்தியிருக்கிறது. லட்சக் கணக்கான ஏழை மக்கள் இந்தக் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். தொழில் சிறிதளவு பாதிக்கப்பட்டாலும் அவர்களுடைய வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுவதைக் காண்கிறோம். ஆகவே நிரந்தரமாக கைத்தறித் தொழில் நன்று நடைபெறுவதற்கான வழிகளை வகுப்பது அவசியம் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். என்றைக்குமே சலுகைகளைப் பெற்றுத்தான் இத்தொழில் நடைபெற வேண்டுமென்றால் அடிக்கடி பல நெருக்கடிகளும் கஷ்டங்களும்

ஏற்பட்டுக்கொண்டுதானிருக்கும். ஒரு நிரந்தர ஏற்பாடு செய்கின்றவரையில் இன்றைக்கு நாம் எடுத்து வரும் எல்லாச் சலுகைகளையும் குறையாது தொடர்ந்து கொடுத்து வருவது அவசியம்.

1959–60-ல் கைத்தறித் தொழிலுக்காகக் கோரப்படும் மான்யம் 126 லட்சம் ரூபாய். இதில் 81 லட்சம் ரூபாய் கூட்டுறவு சங்கங்கள் விற்கும் துணிக்கு விலை வகையில் சலுகை கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 12,500 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் சேர வசதி செய்யப்படும். நெசவாளர்களுக்காக 230 வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. பட்டு நூல் நெசவு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை இரண்டு லட்சம் ரூபாய்.

நெசவாளருக்கு நியாயமான விலையில் தொடர்ந்து நூல் கிடைப்பதற்காக திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நூல் மில்லில் சமீபத்தில் நூல் உற்பத்தி ஆரம்பமாகியுள்ளது. இன்னும் இரு மில்களுக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

குடியிருப்பு வசதிகள்.

35. மொத்தம் 230 லட்சம் ரூபாய் செலவில் 7,750 வீடுகள் கட்டுவதற்கான திட்டங்கள் இதுவரை அங்கீகரிக்கப்பட்டு வீடுகள் துரிதமாகக் கட்டப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் இதற்கென 150 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இதிலிருந்து, குறைந்த வருமானம் பெறுவோருக்காக வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் இப்போது 1,000 வீடுகள் கட்டப்படுகின்றன. இதன் பொருட்டு இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய தொகையான 38 லட்சம் ரூபாய் போதாமல் போய்விட்ட காரணத்தால் அத்தொகையை 65 லட்சம் ரூபாயாக அதிகரித்திருக்கிறேம். ஆகவே 1959–60-ல் இக்குடி வசதித் திட்டங்களுக்கென மொத்தம் 189 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சேரிகளைத் திருத்த வரும் ஆண்டிலும் 60 லட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. இதுவரையில் சேரி சீரமைப்புத் திட்டம் சென்னை நகரில் மட்டும் நடைபெற்று வந்தது. வரும் ஆண்டில் இத்திட்டத்தை மதுரை, கோயமுத்தூர், திருச்சி, சேலம் ஆகிய நகரங்களிலும் எடுத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படாத சில திட்டங்களை நிறைவேற்றவும் நிதி வசதி செய்திருக்கிறேம். கூட்டுறவு சங்கங்கள் மூலம் மத்தியதர வகுப்பினருக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் 17 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தை அடுத்த ஆண்டில் 30 லட்சம் ரூபாய் அளவிற்கு விரிவாக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. போலீஸ் படையினரின் வீட்டு வசதிக்காக 50 லட்சம்

ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அரசாங்க அச்சகத்தில் பணியாற்றும் தொழிலாளிகளுக்குத் தொண்டையார்பேட்டையில் 20 லட்ச ரூபாய் செலவில் 300 வீடுகள் கட்ட திட்டம் அங்கீகரிக்கப்பட்டு நிதி வசதியும் செய்யப்பட்டுள்ளது. மராமத்து இலாகா இன்ஜினீரிங் தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு வீடு கட்டும் திட்டமொன்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஹரிஜனங்களுக்காக வீடுகட்டும் திட்டம் 28 லட்சம் ரூபாய் அளவில் நிறைவேறும்.

சாலைகள்.

36. ரோடுகள் பராமரிப்பில் ஒரு பெரிய மாறுதல் ஏற்படுத்தப்படுகிறது. ஜில்லா போர்டு நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்த எல்லா முக்கிய ரோடுகளையும் 1959–60-ம் ஆண்டிலிருந்து சர்க்காரே நேரடியாக எடுத்துக்கொள்வதென முடிவு செய்திருக்கிறோம். ரோடுகள் பராமரிப்புக்காக நடப்பு ஆண்டில் ஒதுக்கிய தொகை ரூ. 225 லட்சம்தான். இதன் பொருட்டு 1959–60-ம் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 254 லட்சம் ஒதுக்கப்படுகிறது. கிராமப்புறங்களில் சாலை வசதிகளைப் பெருக்குவது மிகவும் அவசியம் என்பதை சர்க்கார் உணர்ந்திருக்கிறது. ஆகவே புதிய சாலைகள் அமைப்பதற்காக ஜில்லா போர்டுகளுக்கு மான்யமாகக் கொடுக்க ரூ. 53 லட்சமும் ராஜ்ய நெடுஞ்சாலை இலாகாவிற்கு ரூ. 81 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. பதினாறு சிறிய பாலங்களும் ஆறு பெரும் பாலங்களும் அடுத்த ஆண்டில் கட்டப்பட்டுவரும்.

கல்வி.

37. ஆரம்பக் கல்வித் துறையில் பல முன்னேற்றங்கள் நடப்பு ஆண்டில் ஏற்பட்டிருப்பதைப்பற்றி ஏற்கனவே கவர்னர் தமது உரையில் குறிப்பிட்டிருந்தது கனம் அங்கத்தினர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஏழைக் குழந்தைகளுக்கு மத்திய உணவளிக்கும் திட்டம் எல்லோராலும் வரவேற்கப்பட்டு பொது மக்களுடைய பேராதரவையும் பெற்றுள்ளது. இவ்வாண்டு முடிவிற்குள்ளாக நான்கு லட்சம் குழந்தைகள் இதன் மூலம் பயன் அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் 6 லட்சம் குழந்தைகளுக்கு இந்த வசதியளிக்க வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 60 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன் ஆரம்பப் பள்ளிகளுக்கு பல்வேறு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பள்ளி சீரமைப்புத் திட்டம் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் காண்கிறோம். குழந்தைகள் எல்லோரும் நல்ல கல்வி பெற வேண்டும் என்ற பொதுமக்களின் நல்லெண்ணமும் பேராவலுமே இந்தத் திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இந்தத் திட்டங்களுக்கான உதவியை அளித்து வரும் எல்லோருக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். எல்லாக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்ற திட்டம் வெற்றிபெற வேண்டுமென்றால் பள்ளிக்கூட வசதிகளை

விரிவாக்குவது அவசியமாகிறது. 1959–60-ம் ஆண்டில் 1,735 புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

வேலையில்லாக் குறையை நீக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில் 6,000 புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். நடப்பு ஆண்டில் 900 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். வரும் ஆண்டில் 1,200 ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளார்கள். இதன் மூலம் நம் ராஜ்யத்தில் 300-க்கு மேல் ஜனத் தொகை கொண்ட எல்லாக் கிராமங்களிலும் ஆரம்பப் பள்ளிகள் ஏற்படும்.

ஆரம்பப் பள்ளிகளின் நிர்வாகத்தை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைப்பதென சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட பஞ்சாயத்து சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளது. இது நடைமுறைக்கு வரும்போது ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரத்திலும் போதுமான அளவிற்கு ஆரம்பப் பள்ளிகளை நிறுவுவதும் அவைகளைச் சரிவர நடத்துவதும் ஆங்காங்குள்ள மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய பஞ்சாயத்து யூனியன்களின் தனிப் பொறுப்பாக இருக்கும். இவை சரிவர இயங்குமென்ற நம்பிக்கை பொது மக்கள் இன்று கல்வி விஷயங்களில் காட்டும் ஆர்வத்திலிருந்தும் முயற்சியிலிருந்தும் நமக்கு ஏற்படுகிறது.

ஆதாரக் கல்விதான் நாம் முடிவாக ஏற்றுக்கொண்டிருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டம் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். எல்லா ஆரம்பப் பள்ளிகளையும் ஆதாரக் கல்வி நிலையங்களாக மாற்ற வேண்டுமென்பதே சர்க்காரின் உறுதியான கொள்கை. அந்த அடிப்படையில்தான் நம் ராஜ்யத்தில் உள்ள ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகள் அனைத்தையும் ஆதாரப்பயிற்சி பள்ளிகளாக மாற்ற முடிவு செய்துள்ளோம். 1959–60-ம் ஆண்டில் 16 பயிற்சிப்பள்ளிகள் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளாக மாற்றப்படும். எஞ்சியிருக்கக்கூடிய பதினேழு பயிற்சிப்பள்ளிகளும் 1960–61-ம் ஆண்டில் மாற்றியமைக்கப்படும். அத்துடன் பயிற்சிப்பள்ளிகளைப் பொருத்தவரையில் நாம் திட்டமிட்டுள்ளபடி ஆதாரக் கல்விக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவந்து விடுவோம்.

ஆரம்பப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றியமைப்பதில் நாம் எதிர்பார்த்த அளவு முன்னேற்றங்காணவில்லை. இந்தப் பிரச்சினையைப் பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட கமிட்டி தன் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கையை ஆராய்ந்து ஆதாரக் கல்வியை பரப்புவதற்கான ஒரு திட்டத்தை வகுக்க எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படும். இதுவரை 2,722 பள்ளிகள் ஆதாரப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. வரும் ஆண்டில் மேலும் 400 பள்ளிகள் மாற்றியமைக்கப்படும்.

2nd March 1959] [Sri C. Subramaniam]

உயர்நிலைப் பள்ளிகளில் ஐம்பது பள்ளிகள் வரும் ஆண்டில் பல்நோக்குப் பள்ளிகளாக அமைக்கப்படும். இதற்கு ஆகக் கூடிய செலவு 9·43 லட்ச ரூபாய். உயர்நிலைப் பள்ளிப் படிப்பின் தரத்தை உயர்த்துவதற்கான மற்ற முயற்சிகளும் தொடர்ந்து நடைபெறும்.

நடப்பு ஆண்டில் கல்வித் துறைக்காக செலவழிக்கப்படும் தொகை 12,33 லட்ச ரூபாய். 1959–60-ம் ஆண்டில் இத் தொகை 13,29 லட்ச ரூபாயாக உயர்கிறது. கல்விக்காக ஒதுக்கப்படும் தொகை வருடா வருடம் உயர்ந்துகொண்டே போக விருக்கிறது. நாம் இவ்வாறு செலவழிக்கும் இப் பெருந் தொகைக்கு ஏற்ற நற்பலன் ஏற்படும்படி பார்த்துக் கொள்வது நமது முதற் கடமையாக இருக்க வேண்டும்: இதை யொட்டித்தான் பல்வேறு கமிட்டிகள் நியமித்து கல்வித் துறையில் எழும் பிரச்சினைகளையும் நன்கு ஆராய்ந்து எல் லோராலும் ஒப்புக்கொள்ளப்படும் ஒரு இணைக்கப்பட்ட கல்வித் திட்டத்தை வகுக்க முயற்சி எடுத்து வருகிறோம்.

பின்தங்கிய பகுதியினர் நலன்.

38. சோஷலிச சமுதாயத்தை லட்சியமாக ஏற்றுக்கொண் டிருக்கும் நிலையில் சமுதாயத்தில் பின் தங்கிய பகுதியினரை முன்னுக்குக் கொண்டு வரத் தனி முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமென்பதுபற்றி வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை. இத்திட்டத்திற்காக வரும் ஆண்டில் 2,34 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்விச் சலுகைகள் கொடுப்பதற்காக ரூ. 34 லட்சம் செலவழிக்கப்படும். உணவு விடுதி மாணவத் திற்காக ரூ. 12 லட்சமும், ஹரிஜனக் குழந்தைகளின் மதிய உணவுக்காகவும் மாணவர் விடுதிகளுக்காகவும் ரூ. 19 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஹரிஜன முன்னேற்றத் திற்காக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் எல்லாத் திட்டங் களும் அடுத்த ஆண்டிலும் தொடர்ந்து நடைபெறுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது.

12–30 p.m.

மருத்துவமும் சுகாதாரமும்.

39. போதுமான அளவில் டாக்டர்கள் இல்லாக்குறை தொடர்ந்து இருந்து வருவதன் காரணமாக மருத்துவத் துறையில் போதிய அளவு முன்னேற்றங் காண முடியவில்லை. இக்குறையை நீக்குவதற்காக நடப்பு ஆண்டில் தஞ்சாவூரில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதென முடிவாகி அதற் கான வேலைகள் நடைபெற இருக்கின்றன. 1959–60-ம் ஆண்டில் இக்கல்லூரிக்குத் தேவையான கட்டிடங்கள் ஆரம்ப மாகும். தற்போது எல்லா மருத்துவக் கல்லூரிகளிலுமாக ஒவ்வொரு ஆண்டிலும் 420 மாணவர்களைச் சேர்க்கக்கூடிய வசதிகள் ஏற்பட்டிருக்கிறது. வேலூர் கல்லூரியை இதில் சேர்க்கவில்லை.

பிரதம ஆரோக்கிய நிலையங்கள் கிராமப் பகுதிகளில் அமைப்பதற்கான திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1958 டிசம்பர் முடிய 67 நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக் கின்றன. இவ்வாண்டு முடிவிற்குள்ளாக 113 நிலையங்கள்

